# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## Pr.O.P..No. 80/2023

சாட்சி : PW– 3
பெயர் : திரு. பாலசுப்ரமணியம் தேதி : 23.07.2025

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( 3ம் எதிர்மனுதாரர் தரப்பில்)

உயில் எழுதும்போது ராமு என்பவருக்கு 60 முதல் 70 வயது இருக்கும். உயிலில் ராமுவின் வயது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது எனக்கு நினைவில் இல்லை. மேற்படி உயில் யார் பெயருக்கு எழுதப்பட்டுள்ளதோ அவரது வயது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதை நான் சரியாக பார்க்கவில்லை. உயிலில் எழுதியவரின் அடையாள அட்டை சம்மந்தமாகவும் யாருக்கு எழுதப்படுகிறதோ அவரது அடையாள அட்டை சம்மந்தமாகவும், சாட்சிகளின் அடையாள அட்டை சம்மந்தமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனது அடையாள அட்டை சம்மந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது. உயிலில் நிபந்தனை ஏதும் விதிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் மனுதாரர் வத்சலாதேவியுடன் சுமூகமாகத்தான் உள்ளேன். அவர் எனது பக்கத்துவீட்டுக்காரர் ஆவார். மனுதாரர் வத்சலாதேவியை யார் பராமரித்து வருகிறார்கள் என்றால் அவர் தனியாகத்தான் உள்ளார். மனுதாரர் வத்சலாதேவிக்கு இந்த உயில் சம்மந்தமாக ராமு இறந்த பிறகு தெரியவந்தது. வத்சலாதேவிக்கு செல்லத்துரை மூலமாக மேற்படி உயில் பற்றி தெரியவந்ததாக சொன்னார். வத்சலாதேவிக்கு இந்த உயில் சம்மந்தமாக நான் எதுவும் தகவல் சொல்லவில்லை. உயில் பதிவு செய்யப்பட்டதா, இல்லையா என்பது எனக்கு

Sd/ R. Velaras,
I Additional District Judge,
Salem.

தெரியாது. ராமு கையொப்பம் செய்த வேறு ஆவணங்களை நான் பார்த்துள்ளேன். உயில் எழுதிய தேதியில்தான் பார்த்தேன். அதற்கு முன்பாக பார்த்ததில்லை. எனது முதல் விசாரணை பிரமாண பத்திரத்தை உயில் எழுதிய ஆரம்பத்திலேயே நான் உடன் இருந்ததாகத்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி உயில் ராமுவால் எழுதி வைக்கப்படவில்லை என்றும், 1ம் எதிர்மனுதாரர் சக்திவேல் போலியாக தயார் செய்த உயிலில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த உயில் போலியானது என்று நிருபிக்கப்பட்டால் என்மீது குற்ற நடவடிக்கை தொடரலாம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். உயில் வரைவு செய்த இடத்தில் இருந்ததாக சொல்லும் ரவிச்சந்திரன் மற்றும் பழனியப்பன் ஆகியோர்கள் வழக்கறிஞர்கள் என்றால் ரவிச்சந்திரன் மட்டும் தான் வழக்கறிஞர் ஆவர். பழனியப்பன் தட்டச்சர் ஆவார். அவர் தான் உயிலை தட்டச்சு செய்தார். உயில் ஆவணம் ரூ.20/– முத்திரைத்தாளில் தயார் செய்தது. எந்த ஊரில் முத்திரைத்தாள் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. ராமு உயிருடன் இருந்தபோது அவரையும், அவரது மனைவியான மனுதாரரையும் யார் பராமரித்தார்கள் என்றால் அவர்களுக்கு ஜங்சன் அருகில் ஒரு கடை இருந்தது. அதனை வாடகைக்கு விட்டு இருந்தார்கள். அதிலிருந்து மாத வருமானம் ரூ.7 ஆயிரம் வந்தது. அதனை கொண்டு அவர்கள் தங்களை பராமரித்து கொண்டார்கள். 1ம் எதிர்மனுதாரர் எங்கு குடியிருந்து வருகிறார் என்பது எனக்கு தெரியாது. மனுதாரரும், அவரது கணவர் ராமுவும் மனுச் சொத்தில்தான் குடியிருந்து வந்தார். மனுச்சொத்து ராமுவின் மூதாதையர் சொத்து என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் மனுதாரர் கேட்டுகொண்டதற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/ R. Velaras,
I Additional District Judge,
Salem.